இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 06.04.2026

# கலைஞர் பெயரை உச்சரிக்க அருகதை கிடையாது!

திருநெல்வேலியில் உரையாற்றிய கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உணர்ச்சிப் பிழம்பாக வெடித்து இருக்கிறார்...

"எனக்கு உயிர் கொடுத்து ஆளாக்கிய தலைவர் கலைஞரை நான் வீட்டுச் சிறையில் வைத்திருந்தேன் என்று நாக்கில் நரம்பில்லாமல் பேசியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

முதலமைச்சராக என்னுடைய செயல்பாடுகளை விமர்சிக்க எதிர்க்கட்சித் தலைவரான உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. தேர்தலில் அதை மக்கள் எடைபோட்டுப் பார்ப்பார்கள். உங்களுக்குத் தக்க பதிலடியைக் கொடுக்கத்தான் போகிறார்கள். ஆனால், தலைவர் கலைஞருடன் ஒரு மகனாக என்னுடைய உறவைப் பற்றி, ஒரு சொல் பேசக் கூட உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. எந்தத் தகுதியும் கிடையாது.

தலைவர் கலைஞரைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? தலைவர் கலைஞர் ஒரு சிங்கம்! வாழ்ந்த காலம் வரை, கோடிக்கணக்கான தொண்டர்களை என் உயிரினும் மேலான 'உடன்பிறப்புகளே' என்ற ஒற்றை மந்திரத்தில் கட்டிப் போட்டிருந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். முதுமையால் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் ஓய்வெடுத்தார். நினைவாற்றலை இழந்தபோதுகூட, மருத்துவர்கள் உங்களுக்கு யாரைப் பிடிக்கும் என்று கேட்டால், 'அண்ணா... அண்ணா...' என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பி அவர். முடியாத நிலையில்கூட, அறிவாலயம் செல்ல வேண்டும்,' முரசொலி'க்குச் செல்ல வேண்டும் என்று துடித்தவர். அவரை யாரும் சிறை வைக்க முடியாது. அவருடைய இதயச்சிறையில் தான் நான் உட்பட உடன்பிறப்புகள் அத்தனை பேரும் குடியிருந்தோம். எடப்பாடி பழனிசாமி அவர்களே... தலைவர் கலைஞர் பெயரைச் சொல்லக்கூட உங்களுக்குத் தகுதியும் கிடையாது; எந்தவித யோக்கியதையும் கிடையாது"

என்று வெடித்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அந்த நேரத்தில் உணர்ச்சியால் அவர் குரல் உயர்ந்தது. கர்ஜித்தது. கூட்டமே கொந்தளித்தது. உணர்ச்சியால் ததும்பி நின்றார்கள் உடன்பிறப்புகள். 'என் உயிரினும் மேலான...' என்று கலைஞர் அவர்கள் சொல்கிறார் என்றால் அதன் உண்மையான பொருள் என்ன என்பதன் அடையாளமாக இந்தக் காட்சி இருந்தது.

வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணாவுக்கு அருகில் தலைவர் கலைஞரையும் அடக்கம் செய்ய இடம் கேட்டார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஆனால் அதனை பழனிசாமி அரசு ஏற்கவில்லை. தலைவர் மு.க.ஸ்டாலின், முரசொலி செல்வம், மு.க.அழகிரி, டி.ஆர்.பாலு, ஐ.பெரியசாமி, கனிமொழி ஆகியோர் நேரில் சென்று முதலமைச்சர் பழனிசாமியிடம் கோரிக்கை வைத்தார்கள்.

'எனது தந்தை என்பதற்காக அல்ல, ஐந்து முறை இந்த நாட்டின் முதலமைச்சர் என்பதற்காக இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று தலைவர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டார். ஆனால் பழனிசாமி அதற்கு உடன்படவில்லை. பின்னர் இதனை கடிதமாக எழுதியும் அனுப்பினார் தலைவர் மு.க.ஸ்டாலின். இந்த கடிதத்தை மூத்த முன்னோடிகள் துரைமுருகன், கே.என்.நேரு, பொன்முடி ஆகியோர் நேரில் சென்று முதலமைச்சர் பழனிசாமியிடம் வழங்கினார்கள். கிண்டியில் இடம் தருவதாக பழனிசாமி ஏமாற்றினார்.

இந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டது கழகம். அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியின் மனுவை முன் வைத்து கழக வழக்கறிஞர்கள் சண்முகசுந்தரம், விடுதலை, என்.ஆர்.இளங்கோ, வில்சன் ஆகியோர் வாதிட்டனர். மனுவை விசாரித்த நீதிபதிகள் குலுவாடி ரமேஷ், சுந்தர் அமர்வு, ' கலைஞரின் உடலை மெரினாவில் அடக்கம் செய்ய சட்டரீதியான எந்த தடையும் இல்லை' என்று தீர்ப்பு அளித்தனர். நீதிமன்றம் அனுமதி பெற்று,ஆகஸ்ட் 8 அன்று அறிஞர் அண்ணா நினைவிடம் அருகில் தலைவர் கலைஞர் உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. பழனிசாமியின் நடு மண்டையில் அன்றே கொட்டி விட்டது உயர்நீதிமன்றம்.

தலைவர் கலைஞரைக் கண்போலக் காத்தார் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'ஓயாமல் உழைத்த தொண்டன் இங்கே உறங்குகிறான்' என்று தனது நினைவகத்தில் எழுதச் சொன்னவர் கலைஞர் அவர்கள். 'ஓய்வுக்கே ஓய்வு கொடுத்த தலைவர்' என்று அவரைக் குறிப்பிடுவார் மாண்புமிகு முதலமைச்சர். **வயது மூப்பின் காரணமாக ஓய்வெடுக்க வேண்டிய நிலையில் கோபாலபுரம் இல்லத்தில் ஓய்வெடுத்தார் கலைஞர். ஆனாலும் அரசியல் கட்சித் தலைவர்கள், முக்கியப் புள்ளிகள், இலக்கியவாதிகள், திரையுலகத்தினர் ஆகியோர் தலைவர் கலைஞரைச் சந்திக்க நினைத்தால் அவர்கள் காலை நேரத்தில் வந்து தலைவர் கலைஞரைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தினந்தோறும் இப்புகைப்படங்கள் வெளியாகி வந்தது என்பது பச்சைத் துரோகி பழனிசாமிக்குத் தெரியுமா?**

**நூற்றுக்கணக்கான புகைப்படங்கள் இதற்கு சாட்சியாக இருக்கின்றன. வீடியோக்கள் ஆதாரங்களாக இருக்கின்றன. இதெல்லாம் பச்சைத் துரோகி பழனிசாமிக்குத் தெரியுமா?**

**அறிவாலயம் வந்தார் கலைஞர். 'முரசொலி'க்கு வந்தார் கலைஞர். பல நேரங்களில் நகர் வலம் வந்தார் கலைஞர். அவர் அடிக்கடி வந்து சென்ற இடமெல்லாம் அழைத்து வரப்பட்டார் கலைஞர். இதெல்லாம் பச்சைத் துரோகி பழனிசாமிக்குத் தெரியுமா?**

**தலைவர் கலைஞர் மறைந்த பிறகு தமிழ்நாடு முழுவதும் புகழஞ்சலிக் கூட்டங்களை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தியதும், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் கலைஞர் சிலையை திறந்து வைத்திருப்பதும் பச்சைத் துரோகி பழனிசாமிக்கு தெரியுமா?**

எம்.ஜி.ஆருக்கு நூற்றாண்டு விழாவை ஒழுங்காகக் கொண்டாடத் துப்பு இல்லாதவர் பழனிசாமி. ஜெயலலிதாவுக்கு இரங்கல் கூட்டம் நடத்த யோக்கியதை கூட இல்லாதவர் பழனிசாமி. பதவி கொடுத்த சசிகலா காலை வாரி விட்ட கடைந்தெடுத்த துரோகி பழனிசாமி.

**அவருக்கு கலைஞரைப் பற்றியும் பேச யோக்கியதை இல்லை. முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைப் பற்றிப் பேசவும் அருகதை இல்லை.**

### வறுமையும், கெட்ட போர்களும் அகன்று

# மனிதம் மட்டுமே ஆட்சி செய்யும் புத்துலகைப் படைப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தியில் உறுதி!

**சென்னை, ஏப். 6-**

**"வறுமையும் கெட்ட போர்களும் அகன்று, மனிதம் மட்டுமே எங்கும் ஆட்சி செய்யும் புத்துலகைப் படைப்போம்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.**


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

கழகத் தலைவர் அவர்கள் ஈஸ்டர் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

கருணையே வடிவான இயேசு கிறிஸ்துவின் மனிதநேயக் கருத்தியல்களை வாழ்வியல் நெறிகளாகக் கொண்டு நடக்கும் கிறிஸ்தவ சகோதரர்கள் அனைவருக்கும் ஈஸ்டர் எனும் உயிர்ப்பு ஞாயிறு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகின் வன்முறைகளும், வெறுப்பும், வறுமையும், கெட்ட போர்களும் அகன்று, மனிதம் மட்டுமே எங்கும் ஆட்சி செய்யும் புத்துலகைப் படைக்க இந்நாளில் உறுதியேற்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### கண்ணை இமை காப்பதுபோல் கலைஞரை காத்த

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீது அபாண்டமாக பழிசுமத்துவதா?

## எடப்பாடி பழனிசாமிக்கு வைகோ கடும் கண்டனம்!

சென்னை, ஏப். 6-

"கண் இமைபோல் கலைஞரை காத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மீது எடப்பாடி பழனிசாமி அபாண்டமாக பழி சுமததுவதா?" என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

எடப்பாடி பழனிசாமி ஆலகால நஞ்சை கக்கியிருக்கிறார். இமை கண்ணைக் காப்பதைப் போல கலைஞரை பாதுகாத்த திமுகழகத் தலைவர் ஸ்டாலின் மீது அக்கிரமமான அயோக்கியத்தனமான அபாண்டப் பழியைச் சுமத்தி உள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அடித்தளத்தில் வட்டச் செயலாளர் முதல் பல வேறு பொறுப்புகளில் பணியாற்றி, திருமணமான ஐந்தாவது மாதத்திலேயே மிசா கைதியாக காவல் துறை கொடுஞ் சிறையில் அடைத்தபோது, சகோதரர் ஸ்டாலின் கடும் சித்ரவதைக்கு ஆளானார்.

தியாக பிம்பமாகவே அவர் பொதுவாழ்வில் இளைஞர் அணியில் பங்கேற்று தன் சீரிய உழைப்பால் அதன் தலைவராகி, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைப்பின் சிகரமாக உயர்ந்து சென்னை மாநகராட்சியின் மேயராகவும், அமைச்சராகவும், துணை முதல்வராகவும், கழகத்தின் கோடானு கோடி தோழர்களின் விருப்பத்திற்கு ஏற்ப முதல்அமைச்சர் பொறுப்பினையும் ஏற்று அந்தப் பதவிக்கு புகழ் மகுடம் சூட்டினார்.



தன்னை ஆளாக்கி வளர்த்து வார்ப்பித்த தன் தந்தையும், கழகத்தின் தலைவருமான கலைஞர் பிணிவயப்பட்ட காலத்தில் கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தார். தமிழகத்தின் காவல் தெய்வமாகத் திகழ்ந்த கலைஞர் மறைந்தபோது, அவர் அறிஞர் அண்ணா மறைந்த வேளையில் எழுதிய நெஞ்சு உருக்கும் இரங்கல் பாவில் வேண்டிக் கொண்டபடி அறிஞர் அண்ணாவின் நினைவிடத்திற்கு அருகிலேயே தி.மு.கழகத் தலைவரை நல்லடக்கம் செய்ய துடியாய் துடித்தார் ஸ்டாலின்.

அதற்காக தன் சுயமரியாதையையும் பொருட்படுத்தாமல் எடப்பாடி பழனிசாமியின் இல்லத்திற்கே சென்று உள்ளம் உருகும் விதத்தில் வேண்டுகோள் விடுத்தும் எடப்பாடி பழனிசாமி ஈவு இரக்கம், தயவு தாட்சண்யம், மனிதாபிமானம் சற்றும் இன்றி தளபதி ஸ்டாலின் வேண்டுகோளை நிராகரித்து உதாசினப்படுத்தினார்.

எந்த நிலையிலும் விடா முயற்சியைக் கைவிடாத தளபதி ஸ்டாலின், வழக்கறிஞர்கள் மூலம் உயர்நீதிமன்றத்தை நாடி தமிழினத் தலைவர் கலைஞரை அண்ணா கண் உறங்கும் இடத்திற்கு அருகிலேயே நல்லடக்கம் செய்யும் தீர்ப்பை நீதியரசர்கள் வழங்கிய செய்தியை செவியுற்ற மாத்திரத்தில் கண்களில் கண்ணீர் மல்க நெஞ்சுருகி கதறினார். உலகெங்கும் உள்ள கோடானு கோடி தமிழர்கள் இதைக் கண்ணுற்று மனம் கலங்கினர்.

**எச்சரிக்கை செய்கிறேன்!**

கல்லினும் கொடிய மனம் கொண்ட எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதல்வர் சகோதரி ஜெயலலிதாவின் பாதபடிகளுக்கு சேவகம் செய்த தன்மானமற்ற ஒரு நபராவார். இனி மேல் இதுபோன்ற அவதூறு கருத்துகளை அவர் கூறுவாரானால் என் தாக்குதல்களுக்கு அவர் பதைபதைத்து பின்னங்கால் பிடரியில் அடிபட அரசியல் களத்தில் ஓட நேரிடும் என எச்சரிக்கை செய்கிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கிறிஸ்துவ தொண்டு நிறுவனங்களின்

# சொத்துக்களைப் பிடுங்க சட்டம் கொண்டு வருவதா?

## ஒன்றிய அரசுக்கு பி.வில்சன் எம்.பி. கடும் கண்டனம்!

சென்னை, ஏப்.6 -

கிறிஸ்துவ தொண்டு நிறுவனங்களின் சொத்துக்களைப் பிடுங்க ஒன்றிய அரசு சட்டம் கொண்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது" என்று மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் மூத்த வழக்கறிஞர் வில்சன் எம்.பி. நேற்று அளித்த பேட்டி வருமாறு:-

ஏற்கனவே இஸ்லாமிய நண்பர்களுக்கு வக்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து அவர்களின் சொத்துகளை அடித்துப் பிடுங்கிய பா.ஜ., இப்பொழுது கிறிஸ்துவ தொண்டு நிறுவனங்களின் சொத்துக்களை அடித்து பிடுங்குவதற்கு எப்.சி.ஆர்.ஏ. என்ற கொடூரமான சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. ஒரு பள்ளியையோ, கல்லூரியையோ, மருத்துவமனையையோ அல்லது ஆதரவற்றோர் மற்றும் முதியோர் இல்லங்களையோ நடத்துவதில் என்ன



தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கப் போகிறது? இந்த கொடூரமான சட்டத்தை எதிர்த்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அடுத்த நிமிஷமே ஆதரவற்றோர் இல்லங்கள். கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் அனைத்தும் அரசுக்கு சொந்தமாகிவிடும். 2020ல் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் மூலம் 20,000க்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டன; ஒரே நேரத்தில் 2,500 கிறிஸ்துவத் தொண்டு நிறுவனங்களின் உரிமங்கள் புதுப்பிக்கப் படாமல் முடக்கப்பட்டன. இதை எதிர்த்து வழக்கு போட்டா லும் அவர்களுக்கு எந்த [நிவாரணமும் கிடைக்காமல் தடுத்தார்கள்.

**என்ன தீவிரவாதத்தைப் பார்த்துவிட்டார்கள்?**

இப்பொழுது இந் தச் சட்டத்தின் மூலம் உரிமம் இல்லாத நிறு வனங்களின் சொத்துகள் அடுத்த நொடியே ஒன்றிய அரசுக்குச் சென்று விடும். இது நாளைக்கு கிறிஸ்துவர்களின் தனிப்பட்ட சொத்துக ளையும் எடுக்கும் அளவிற்குச் செல்லும் என்பதையே காட்டுகிறது. இஸ்லாமியர் கள் மற்றும் கிறிஸ்துவர்களின் சொத்துக்களைப் பறிப்பதன் மூலம் நாட்டில் பிரிவினை வாதத்தை உண்டாக்கி, மற்றவர்களின் சொத்துகளைக் கொள்ளையடிப்பதே இவர்களின் எண்ணம்.

அரசு செய்ய முடியாத மக்கள் நலப்பணிகளை 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்து வரும் இந்த நிறுவனங்களில் இவர்கள் என்ன தீவிரவாதத்தைப் பார்த்து விட்டார்கள்? இந்த மசோதாவின்படி, பறிக்கப்படும் சொத்துகளை ஏலம் விடலாம் என்றும், அப்படி ஏலம் விடப்பட்டால் அந்தச் சொத்தைப் பற்றி நீங்கள் எதுவுமே கேட்க முடியாது என்றும் சொல்லப் பட்டுள்ளது. இவ்வாறு எடுக்கப்படும் சொத்துக்கள் இந்தியாவிலுள்ள இரண்டு மூன்று பணக்காரர்களிடமே போய்ச் சேருகின்றன.

**நாடாளுமன்றத்தில் தி.மு.க. எதிர்க்கும்!**

நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் தற்போது இது விவாதத்திற்கு வரவில்லை என்றாலும், மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எப்போது வேண்டுமானாலும் கொண்டு வரப்படலாம். குறிப்பாகக் கிறிஸ்துவர்கள் 40 நாட் கள் தவக்காலத்தைக் கடைப்பிடித்து வரும் இந்த நேரத்தில், ஈஸ்டர் மற்றும் புனித வெள்ளிக்கு இடைப்பட்ட காலத்தில் இத்தகைய மசோதாவைக் கொண்டு வந்து மக்களைப் பயமுறுத்துவது தேவையற்ற செயலாகும்.

தி.மு.க. இதனை நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்க்கும். இது ஒரு புறமிருக்க, 'ஜன் விசுவாஸ்' என்ற மற்றொரு திருத்தச் சட்டத்தின் மூலம் 80 ஒன்றிய அரசு சட்டங்கள் திருத்தப் பட்டு, 717 குற்றங்களுக்கான தண்டனைகள் குறைக்கப் பட்டுள்ளன. முன்பு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றங்களுக்கு இப்போது வெறும் அபராதம் (Penalty) கட்டினால் போதும் என்று மாற்றியுள்ளனர்.

இந்தச் சட்டங்கள் அனைத்தும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமாகவே உருவாக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகள் பணத்தைக் கட்டிவிட்டு "ஒயிட் காலர் மனிதர்களாக உலவ இது வழிவகுக்கும்.

இவ்வாறு வில்சன் எம்.பி.கூறினார்.

## தஞ்சையில் வார் ரூம் திறப்பு!

தஞ்சாவூர், ஏப். 6 –

தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு பணிக்காக வார் ரூம் திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தஞ்சை மத் திய மாவட்ட கழக செய லாளரும், திருவையாறு சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான துரை. சந்திரசேகரன், தஞ்சை நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் முரசொலி, கழக சட்டத் துறை இணைச் செயலாளர் சூர்யா வெற் றிகொண்டான் ஆகியோர் முன்னிலைவைத்து 'வார் ரூமை' திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றினார். மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திறக்கப்பட்டவார் ரூமானது திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்த நாடு தொகுதிகளை கண்காணிக்க திறக்கப் பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

இந்த நிகழ்ச்சியில் தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், முன்னாள் எம்.எல்.ஏ.வும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ராமச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வம், தஞ்சை துணை மேயர் அஞ்சுகம் பூபதி மற்றும் கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி தேர்தல் காரியாலத்தை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி திறந்து வைத்து, கலைஞரின் திரு உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதுடன் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர், வெற்றி வேட்பாளர் பெ. கீதா ஜீவனை ஆதரித்து வாக்கு சேகரித்தார். நிகழ்வில், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, காங்கிரஸ் கமிட்டி குழு துணைத் தலைவர் ஏ.பி.சி.வி.சண்முகம், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மற்றும் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சியின் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.